16.04.2026 MCOP No.54/2019

சாட்சி: PW 1 மணிமேகலை

சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மறுதிறப்பு செய்யப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. விபத்தில் இறந்த முருகன் எனது கணவர் என்றால் சரிதான். இந்த விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை கேள்விப்பட்டதன் அடிப்படையில் சொல்கிறேன். விபத்தின் போது எனது கணவர் என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் ஊரில் டீக்கடை வைத்திருந்தார், அதற்கு முன்னர் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார், அதற்கு பிறகும் வெளிநாடு போக திட்டமிட்டுருந்தார். வெளிநாட்டில் என்ன வேலை செய்து வந்தார் என்றால் டீ மாஸ்டராக இருந்து வந்தார். அவர் எந்த நாட்டில் வேலை பார்த்து வந்தார் என்றால் மலேசியாவில் வேலை பார்த்து வந்தார். அவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்ததற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாஸ்போர்ட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன வேலை பார்த்துவருகிறேன் என்றால் மாவு அரைத்து விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன்.

2.டீக்கடை மூலமாக மாவு விற்பனை செய்து வருகிறேன் என்றால் எனது கணவர் இறந்த பிறகு டீக்கடையை நிறுத்திவிட்டேன். எப்போது டீக்கடையை விட்டீர்கள் என்றால் எனது கணவர் இறந்த உடன் நிறுத்திவிட்டேன். விபத்தின் போது எனது கணவர் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டதா என்றால் தலையிலும், உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. விபத்தின் போது எனது கணவர் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார். இந்த விபத்தில் ஈடுபட்ட மற்றொரு வாகனம் இருசக்கர வாகனம் என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிய மருதுபாண்டி என்பவருக்கு விபத்தின்போது ஓட்டுநர் உரிமம் கிடையாது என்ற விவரம் தெரியுமா என்றால் அந்த

விவரம் எனக்கு தெரியாது. எனது கணவரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் அதற்கு காப்பீட்டு நிறுவனம் எந்த வித இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகையானது மிகைப்படுத்தி கோரப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.